பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 11 2025 SATURDAY 6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** பழங்குடியினர் நலனுக்காக ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2)** அம்ரித் திட்டம் நோயாளிகளுக்கு சுமார் **8** ஆயிரத்து **500** கோடி ரூபாய் சேமிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

**3)** தூய்மைப் பணியாளர்களுக்கான இலவச உணவு வழங்கும் திட்டம் அடுத்த மாதம் **6-**ஆம் தேதிமுதல் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

**4)** தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** மலேசியா சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சாய் கார்த்திக் — தாய்லாந்தின் **Thantub Suksumrarn** இணை பட்டம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பழங்குடியினர் நலனுக்காக ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

விடுதலை போராட்ட வீரர் பிர்சா முண்டாவின் 150-ஆவது பிறந்த நாளையொட்டி, குஜராத் மாநிலம் Dediapada-வில் நடைபெற்ற பழங்குடியினர் பெருமை தின விழாவில் பேசிய அவர், மத்தியில் பிஜேபி ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், பழங்குடியினர் நலனுக்காக தனி அமைச்சகம் தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் கௌரவம் மற்றும் சுயமரியாதையை பாதுகாப்பதில் பழங்குடியினர் சமுதாயம் எப்போதும் முன்னிலையில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் நடைபெற்ற பல்வேறு புரட்சிகளில் பழங்குடியின மக்கள் ஏராளமானோர் பங்கேற்றிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

மத்திய அரசின் அம்ரித் திட்டம் கடந்த பத்தாண்டுகளில் நோயாளிகளுக்கு சுமார் 8 ஆயிரத்து 500 கோடி ரூபாய் அளவிற்கு சேமிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

மக்களுக்கு குறைந்த விலையில் மருந்துப் பொருட்கள் மற்றும் நம்பகமான உறுப்பு மாற்று சிகிச்சைக்கான இத்திட்டம் தொடங்கப்பட்டு பத்தாண்டுகள் நிறைவடைவதையொட்டி, புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவனந்தபுரம், ஜோத்பூர், ஸ்ரீநகர் உள்ளிட்ட பத்து இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அம்ரித் மருந்தகங்களை திறந்துவைத்து அவர் பேசினார்.

இந்த மருந்தகங்களில் இதய நோய், புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் 50 சதவீத தள்ளுபடி விலையில் கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

சுமார் ஆறாயிரத்து 500-க்கும் அதிகமான மருந்துகள் இந்த மருந்தகங்களில் கிடைப்பதாகவும், இதுவரை ஆறு கோடியே 85 லட்சத்திற்கும் அதிகமான நோயாளிகள் பயனடைந்திருப்பதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தூய்மைதான் அடிப்படையாக உள்ளது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு மற்றும் வீடு வழங்கும் திட்டத்தை சென்னையில் இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், இயற்கை பேரிடர் காலத்தில் தூய்மைப் பணியாளர்களின் பணி மகத்தானது என்றார்.

தூய்மைப் பணியாளர்கள் செய்வது வேலை அல்ல, சேவை என்று குறிப்பிட்ட அவர், இந்த பணியாளர்களின் நலனுக்காக மாநில அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டார்.

சென்னை மாநகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் தூய்மைப் பணியாளர்களுக்கு அடிப்படை வசதியுடன் புதிய ஓய்வறைகள் கட்டப்படும் என்றும் கூறினார்.

இலவச உணவு வழங்கும் திட்டம் அடுத்த மாதம் 6-ஆம் தேதிமுதல் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார்.

<<<<<>>>>>

நாட்டிலேயே தமிழகத்தில்தான் அரசு அலுவலர்களும், மருத்துவர்களும் மக்களைத் தேடிச் சென்று அவர்களின் தேவையை பூர்த்தி செய்து வருவதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் பாளையம்பட்டியில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமை தொடங்கிவைத்து பேசிய அவர், இம்மாவட்டத்தில் **36** பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளதாக கூறினார்.

மகளிர் உரிமைத் தொகை கோரி விண்ணப்பித்துள்ளவர்களில் தகுதியானர்களுக்கு விரைவில் அந்த தொகை வழங்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

மாநில அரசின் அக்கறையின்மை காரணமாக தமிழகத்திற்கு வரவிருந்த தொழிற்சாலைகள் வேறு மாநிலங்களுக்கு செல்வதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கொரியாவை சேர்ந்த **Hwasung** நிறுவனம் தமிழகத்தில் தொழில் தொடங்குவதாக அறிவித்திருந்த நிலையில், தற்போது இத்தொழிற்சாலையை ஆந்திர மாநிலத்தில் தொடங்க இருப்பதாக அந்நிறுவனம் அறிவித்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த நான்காண்டுகளாக முதலமைச்சர் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம்,

தமிழகத்திற்கு எந்த பயனும் இல்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தென்மேற்கு வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக, இன்றும், நாளையும், மயிலாடுதுறை திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று கூறினார்.

***(Voice Byte — செந்தாமரை கண்ணன் — 50 Sec. )***

<<<<<>>>>>

மத்திய தொழிலக பாதுகாப்புப்படை வீரர்கள், மாறிவரும் பாதுகாப்பு சவால்களுக்கு ஏற்ப, சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்று அந்த படைப்பிரிவின் தென்மண்டல ஐ ஜி திரு சரவணன் வலியுறுத்தியுள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலத்தில் உள்ள இந்த படைப்பிரிவின் பயிற்சி மையத்தில், காவலர் பயிற்சி நிறைவு அணிவகுப்பை இன்று பார்வையிட்டு அவர் பேசினார்.

புதிதாக பணியில் சேரும் காவலர்கள், நாடாளுமன்றம், விண்வெளி மற்றும் அணுசக்தி மையங்கள் உள்ளிட்ட முக்கிய அமைப்புகளின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ளதால், மன உறுதியுடன் பணியாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

நாட்டின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வீர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் திரு சரவணன் அறிவுறுத்தினார்.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் நடைபெற்ற நலம்காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் மாநில அமைச்சர் திரு நாசர் பங்கேற்று கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.

----------------

திருப்பூர் மாவட்டத்தில், குரூப்-2 பணியிடங்களுக்கான முதன்மை தேர்வுக்கான இலவச பயிற்சியில் சேர விரும்புவோர்

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு ஆட்சியர் திரு மணீஷ் நாரனவரே கேட்டுக்கொண்டுள்ளார்.

------------------

உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான ஓவியப் போட்டி, வரும் **22**-ஆம் தேதி சாந்தோமில் உள்ள சி எஸ் ஐ காது சேளாதோர் சிறப்புப் பள்ளியில் நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

------------------

நாமக்கல் மாவட்டம் மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவைப்பணியை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

--------------

தேசிய ஒற்றுமையை வலியுறுத்தி, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை சைக்கிள் பயணம் மேற்கொண்டுள்ள வீரர்களுக்கு தருமபுரியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

------------------

திருப்பூர் மாவட்டம் உடுமலைபேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மலைவாழ் மாணவிகள் உட்பட **20**

மாணவிகள் தொண்டு அமைப்பின் ஏற்பாட்டில் முதல் முறையாக விமானப் பயணம் மேற்கொண்டனர்.

----------

நாமக்கல் மாவட்டத்தில் சிறுநீரக விற்பனை முறைகேட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டின்பேரில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

---------------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே செம்மரம் வெட்டி கடத்திய சம்பவத்தில் தொடர்புடைய இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மலேசியா சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சாய் கார்த்திக் — தாய்லாந்தின் **Thantub Suksumrarn** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை **7-6, 4-6, 12-10** என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Corban Crowther** — நெர்லாந்தின் **Fons Van** இணையை வென்றது.

-------------

**இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று தென்னாப்பிரிக்கா தனது இரண்டாவது இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 7 விக்கெட் இழப்பிற்கு, 93 ரன் எடுத்துள்ளது.**

**----------------**

**உலகக்கோப்பை இளையோர் ஹாக்கிப் போட்டிக்கான கோப்பை மதுரை நகரில் இன்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.**

**<<<<<END>>>>>**